(அ) தர்மபுரி தொகுதி தொப்பூருக்கு அருகில் தொப்பை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையினால் தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜ முகமது: (அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்தில் 2,050 ஏக்கரும், சேலம் மாவட்டத்தில் 3,280 ஏக்கரும் பாசன வசதி பெறும்.

குப்பநத்தம் அருகே செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண். 76—திரு. தா. காமிக்கண்ணு: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் செங்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள குப்பநத்தம் என்னுமிடத்தில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

(இ) அணை கட்டும் பணிகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜ முகமது: (அ), (ஆ) மற்றும் (இ) செய்யாற்றின் குறுக்கே பாலாறு வடிநிலத்தில் உள்ள குப்பநத்தம் அணைத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது. தற்போது பாலாற்றிலும், செய்யாற்றிலும் பல இடங்களில் டிசம்பர் 78 முதல் நடந்து வரும் நீர் அளவைப் பணிகள் மொத்தம் 5 ஆண்டுகள் நடத்தப்பட வேண்டும். இப்பணிகள் இவ்வடிநிலத்தில் உபரி நீர் உள்ளது என்று தெரிந்தால் இந்தத் திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாற்றின் அருகே குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டம் அரசின் ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அந்த அணைக்கட்டு கட்டும்போது, தண்டரை அணைக்கட்டிற்கான அந்த பாசன ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜமுகமது: தலைவர் அவர்களே, குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதே 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தெரியும். அப்போதுதான் எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்பது தெரியும். அப்படி உபரி நீர் இருந்தாலும், ஏற்கனவே இருக்கின்ற ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதைக

கவனத்திலே கொண்டுதான், உபரி நீரைப் பயன்படுத்துவதற்காக திட்டம் முடிவு செய்யப்படும். ஆகவே, நிச்சயமாக ஏற்கனவே இருக்கின்ற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாது.

திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர் நிலைப்பள்ளி

*வினா எண். 68—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் வகுப்பறைகள் அதிகமாகக் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையினிட மிருந்து கோரப்பட்டுள்ளன. அவை கிட்டியபின் கட்டிடம் கட்டுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தாலுகா தலைமை இடமாக, நகராட்சியாக விளங்குகின்ற, வளர்ந்து வருகின்ற பேரூராகும். திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஏறத் தாழ 22 வகுப்பறைகளில், பாதிக்கு மேற்பட்ட வகுப்புகள் மரம்கூட இல்லாத நிலைமையிலே, வெளியிலே நடக்கின்றன. அங்கிருக்கும் மாணவர்கள் தங்களுக்கு வகுப்பறைகள் வேண்டு மென்று கேட்கிறார்களே தவிர, தங்களுக்கு மின்சார வசதி வேண்டுமென்று கேட்கவில்லை; ஏர் கூலர் வேண்டுமென்று கேட்கவில்லை; டி. வி. வசதி கேட்கவில்லை. ஆனால், அவர்கள் ஒழுகாத கூரைக் கட்டிடங்கள் வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கான வரை படங்கள் பொதுப்பணித்துறையிலே இருந்து வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இரண் டாண்டு காலமாக அவைகள் கட்டி முடிக்கப்படாமலும், மேலும் வேறு வகுப்பறைகள் கட்டுவதற்கு இடமில்லாத காரணத்தினா லும் இதை ஏதாவது ஒரு கிராஷ் புரோகிராம் திட்டத்தில் எடுத்துக்கொண்டு, நம்முடைய அரசிடம் நிதி வசதி குறைவாக இருந்தாலுங்கூட, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெற்றாவது, இதைச் செய்வதற்கு விரைவாக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மிடமிருக்கின்ற நிதி வசதியைப் பொருத்தமட்டில், பல்வேறு பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம். இப்போதுகூட, 200-க்கு மேற் பட்டபள்ளிகளில் ஒரு வகுப்பறைகூட நிரந்தரமான கட்டிடத்தில் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவைகளை